பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 04 2026 WEDNESDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. புதுச்சேரி, கேரளம் மற்றும் அஸ்ஸாம் சட்டப்பேரவைகளுக்கு நாளை தேர்தல் நடைபெறுகிறது.

1. பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் உரங்கள் தடையின்றி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

2. அமெரிக்கா - ஈரான் இடையிலான சண்டை நிறுத்தத்தை இந்தியா வரேவற்றுள்ளது.

3. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இரண்டாவது கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

4. ஆசியா-ஓசியானா பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

- - இனி விரிவான செய்திகள் -

< < < < < < < > > > > > > >

புதுச்சேரி, கேரளம் மற்றும் அஸ்ஸாம் சட்டப்பேரவைத் தேர்தல் நாளை நடைபெறுகிறது.

புதுச்சேரியில் 30 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நாளை காலை 7 மணிமுதல், மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுச்சேரி, காரைக்கால், மாஹே உள்ளிட்ட யூனியன் பிரதேசத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் 9 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நாளை தங்களது வாக்குகளை செலுத்த உள்ளனர்.

இதில், 24 ஆயிரத்து தொள்ளாயிரத்து 19 பேர் முதல் முறை வாக்காளர்கள்.

மொத்தம் 294 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

அஸ்ஸாமில் 126 தொகுதிகளுக்கு நாளை நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது.

இந்த தேர்தலில் 722 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மாநிலத்தில் உள்ள 31 ஆயிரத்து 490 வாக்குச்சாவடி மையங்கள் Webcasting மூலம் கண்காணிக்கப்பட உள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு Anurag Goel தெரிவித்துள்ளார்.

**34 ஆயிரம் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வீட்டில் இருந்தபடியே வாக்களித்துள்ளனர்.**

**தேர்தலை சுமூகமாக நடத்த ஒன்றரை லட்சம் பேர் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.**

**கேரளம் மாநிலத்தில் நாளை நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலில், 2 கோடியே 71 லட்சம் வாக்காளர்கள் தங்களது வாக்குகளை செலுத்த உள்ளனர்.**

**மாநிலம் முழுவதும் 30 ஆயிரத்து 495 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.**

**இதில், 2 ஆயிரத்து 40 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளது.**

**இந்த தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.**

**<<<<<<<>>>>>>>**

**சர்வதேச தேர்தல் பார்வையாளர் திட்டத்தின்கீழ், ஆறு நாடுகளை சேர்ந்த ஒன்பது பிரதிநிதிகள் இன்று புதுச்சேரி வந்துள்ளனர்.**

கிர்கிஸ்தான், மால்டோவா, மங்கோலியா, கயானா, உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த இந்த பிரதிநிதிகள் இன்று புதுச்சேரி தேர்தல் அதிகாரியை சந்தித்துப் பேசினர்.

பின்னர், வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்புடன் அனுப்பப்படும் நடைமுறையை பார்வையிட்டனர்.

நாளை வாக்குச்சாவடிகளுக்கு சென்று புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை நேரடியாக பார்வையிடுகின்றனர்.

இந்திய தேர்தல் நடைமுறையை சர்வதேச சமுதாயத்தினர் அறிந்துக்கொள்ளும் வகையில், சர்வதேச தேர்தல் பார்வையாளர் எனும் முன்னோடித் திட்டத்தை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

<<<<<<<>>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சட்டம் – ஒழுங்கை பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிஜேபி, தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டுள்ளது.

அக்கட்சியின் மூத்த தலைவர் டாக்டர் வீரேந்திர குமார் தலைமையிலான குழுவினர் இன்று தேர்தல் ஆணையத்தில் முறையீடு செய்துள்ளனர்.

<<<<<<<>>>>>>>

கோவா மாநிலம் Ponda சட்டப்பேரவை தொகுதிக்கு நாளை நடைபெறுவதாக இருந்த இடைத்தேர்தலை மும்பை உயர்நீதி மன்றம் ரத்து செய்துள்ளது.

இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்த நீதிபதிகள் திரு. Valmiki Menezes, திரு. அமீத் ஜாம்சண்டேகர், கோவா சட்டப்பேரவை தேர்தல் நடைபெற ஓராண்டு காலமே உள்ள நிலையில் Ponda தொகுதிக்கு தேர்தல் நடத்தப்படுவது தேவையற்றது என்றும் கூறியுள்ளனர்.

<<<<<<<>>>>>>>

சமையல் எரிவாயு, பெட்ரோல் மற்றும் டீசல் தடையின்றி கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற மேற்காசிய சூழல் குறித்த அமைச்சர்கள் குழு கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய அவர், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மேற்காசிய போர் சூழலால் ஏற்பட்டுள்ள பாதிப்பில் இருந்து, நாட்டு மக்களை பாதுகாக்க அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும், அதற்கான பணிகளையும் முனைப்புடன் மேற்கொண்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

புதுதில்லி வந்துள்ள பங்களாதேஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. கலிலுர் ரஹ்மானை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தார்.

இது தொடர்பாக டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், திரு. கலிலுர் ரஹ்மான் மற்றும் அந்நாட்டு தூதுக் குழுவினரிடம் தான் நடத்திய பேச்சுகள் ஆக்கப்பூர்வமாகஅைமந்திருந்தாக தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் பல்வேறு துறைகளில் ஒத்துழப்பை விரிவுபடுத்துவது குறித்தும் இந்த சந்திப்பின் போது விவாதித்தாக தெரிவித்தார்.

மண்டல மற்றும் உலகளாவிய அரசியல் சூழ்நிலைகள் குறித்தும் அவ்வப்போது மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பாதுகாப்பான அணுகுமுறையை வகுப்பது குறித்தும் இரு

தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாக டாக்டர். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

அமெரிக்கா- ஈரான் இடையிலான சண்டை நிறுத்தத்தை இந்தியா வரேவற்றுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், மேற்காசிய மண்டலத்தில் அமைதியை நிலைநாட்டவும் ஹோர்முஸ் நீரிணை வழியாக வர்த்தகம் தடையின்றி நடைபெறுவதற்கும் இது வழிவகுக்கும் என்று கூறினார்.

அமைதியையும் அரசியல் நிலைத்தன்மையையும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதிலும், மேற்காசியாவில் பொருளாதார வளர்ச்சி தடையின்றி நடைபெற வேண்டும் என்பதிலும் இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உக்ரைனில் மேற்கொள்ளப்படும் சமரச முயற்சிகளையும் இந்தியா வரவேற்பதாக திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அமைச்சரவை கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த தகவல் ஒலிபரப்பு துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், பிரகலாத்புரா- Todi Mod இடையே 41 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரண்டாவது கட்ட மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

13 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இந்த மெட்ரோ ரயில் திட்டத்தில் 13 ரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

மத்திய- மாநில அரசுகள் இணைந்து மேற்கொள்ளும் இந்த திட்டம் ராஜஸ்தான் மெட்ரோ ரயில் கழகத்தின் மூலம் செயல்படுத்தபடும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெய்ப்பூர் விமான நிலையம், மருத்துவமனை, விளையாட்டரங்கம், தொழிற்பேட்டை அமைந்துள்ள இடங்கள் இந்த இரண்டாவது கட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<<>>>>>>>

நாட்டில் உள்ள நிலக்கரி சுரங்கங்கள் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்களில் போதிய அளவு நிலக்கரி கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த நிலக்கரி அமைச்சகத்தின் இணை செயலர் திரு. சஞ்சீவ் குமார் காஷி, மேற்காசிய போர் சூழல் காரணமாக நாட்டில் நிலக்கரியின் விலை உயர்த்தப்படவில்லை என்று தெரிவித்தார்.

மேலும் மேற்காசிய போர் சூழலுக்கு ஏற்ப போதிய அளவு நிலக்கரியை இருப்பில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுளளதாக தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி. சுஜாதா சர்மா, சமையல் எரிவாயு, பெட்ரோல் , டீசல் ஆகியவை நாடு முழுவதும் தேவையான அளவு இருப்பில் உள்ளதாகவும் அவற்றின் விநியோகம் சீராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் வீட்டு உபயோகத்திற்கு நூறு சதவீதம் சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வர்த்தக பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டர்கள் முறைப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நகர்ப்புறங்களில் குழாய் மூலம் சமையல் எரிவாயு வழங்குவதற்கான இணைப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி சுஜாதா சர்மா கூறினார்.

<<<<<<<<>>>>>>>>

நாட்டில் கரிமப்பொருட்கள் இல்லாத எரிசக்தி உற்பத்தி திறன் கடந்த நிதியாண்டில் 55 கிகாவாட் அளவுக்கு அதிகரித்துள்ளதாக புதுப்பித்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஆண்டில் புதுப்பித்தக்க எரிசக்தி துறையில் சாதனைகளை பட்டியலிட்டார்.

இதுவரை 283 கிகாவாட் அளவுக்கு கரிமப்பொருட்கள் இல்லாத எரிசக்தி திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

புதுப்பித்தக்க எரிசக்தி திறனில் உலகின் மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் ஒட்டுமொத்த சூரிய மின்சக்தி திறன் 150 கிகாவாட் கடந்துள்ளதாகவும் திரு. பிரல்ஹத் ஜோஷி தெரிவித்தார்.

**கடந்த ஆண்டில் மட்டும் சூரிய மின்சக்தி திறன் 45 கிகாவாட் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.**

**2030-ம் ஆண்டு இலக்கான கரிமப்பொருட்கள் இல்லாத எரிசக்தி உற்பத்தி திறன் தற்போதே எட்டப்பட்டுள்ளதாகவும் திரு. பிரல்ஹத் ஜோஷி கூறினார்.**

**<<<<<<<>>>>>>>**

**ஆசியா-ஓசியானா பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.**

**பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் Paramjeet Kumar வெள்ளிப்பதக்கத்தையும், Manish Kumar வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.**

**-------------**

**உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.**

**ஸ்பெயினின் Granada-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.**

**--------------**

**ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து மற்றும் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.**

**சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் பி வி சிந்து, 15-21, 21-11, 21-19 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Wong Ling Ching-ஐ வென்றார்.**

**<<<<<<<END>>>>>>>**